RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

DOI: 10.54392/ijmrd223S119

# Batticaloa, Tamil People and Music

## மட்டக்களப்புத் தமிழக மக்களும், இசையும்

**Thangarasa Gopinath** [a,*]

[a] Department of Music, Annamalai University, Annamalai Nagar, Chidambaram-608002, Tamil Nadu, India.

*Corresponding author Email: kopinathth89@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S119

Received: 13-04-2022; Revised: 18-07-2022; Accepted: 23-07-2022; Published: 19-08-2022

**Abstract:** The Batticaloa district is home to many folk music traditions. They were seen interwoven with all aspects of life, like worldliness, worship, entertainment, and business. Due to migration, urbanization, development of modern technology, continuous war, colonial rule, etc., the rich traditions of folk music such as kombumuri songs, dance drama songs, and midwifery songs have disappeared from the learning level and become obsolete. Some of these musical traditions, like dance drama songs, are being revived through universities. Also, due to the change of time, Western music, melodies (film songs), and Carnatic music gradually entered Batticaloa, Tamil Nadu. As a result, many of the main classical folk music traditions have become obsolete. The purpose of writing this research paper is that there are many musical traditions found in Batticaloa, Tamil Nadu, and its current status is to inform the youth and the world about the old musical traditions.

**Keywords:** Batticaloa, Musical Traditions, Tamil People, Songs.

**Language: Tamil**

## முன்னுரை

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொன்று தொட்டு ஏராளமான நாட்டார் இசைமரபுகள் காணப்பட்டன. அவை மக்களது லௌகீகம், வழிபாடு, பொழுதுபோக்கு, தொழில் என அனைத்து வாழ்வியல் அம்சங்களுடன் பின்னிப்பிணைந்து காணப்பட்டன. இடப்பெயர்வு, நகரமயமாக்கம், நவீன தொழில் நுட்ப வளர்ச்சி, தொடர்ச்சியான போர், காலனித்துவ ஆட்சி, போன்ற காரணங்களால் செழுமையான நாட்டார் இசை மரபுகளான கொம்பு முறிப்பாடல்கள், கூத்துப்பாடல்கள், மருத்துவிச்சிப் பாடல்கள் என்பன பயில் நிலையில் இருந்து மறைந்தும், வழக்கில் இல்லாமலும் போய்விட்டன. அவற்றில் சில இசைமரபுகள் பல்கலைக்கழகங்கள் ஊடாக (கூத்துப்பாடல்கள்) மீளுருவாக்கம் செய்யப்படுகின்றன. அத்துடன் காலமாற்றத்தினால் மேற்கத்தேய இசை, மெல்லிசை (சினிமாப் பாடல்கள்), கர்நாடக இசை என்பன மட்டக்களப்பு தமிழகத்தில் படிப்படியாக புகுந்தன. இதனால் பிரதான தொன்மைமிக்க நாட்டார் இசைமரபுகள் ஏராளமானவை வழக்கொழிந்து விட்டன. இவ் ஆய்வுக்கட்டுரை எழுதப்பட்டதன் நோக்கம் யாதெனில் மட்டக்களப்பு தமிழகத்தில் ஏராளமான இசைமரபுகள் காணப்பட்டன என்பதனையும் அதன் தற்கால நிலை, வழக்கொழிந்த இசைமரபுகள் பற்றியும் இளஞ்சமுதாயத்தினருக்கும், உலக மக்களுக்கும் தெரிவிப்பதற்காகவே ஆகும். அத்துடன் களஆய்வு, விபரண ஆய்வு, வரலாற்று ஆய்வு, சமூகவியல் ஆய்வு போன்ற ஆய்வியல் முறையியல்கள் ஊடாக அவ் ஆய்வுக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

## தொன்மை மிக்க நாட்டார் இசைமரபுகள்

மட்டக்களப்புத் தமிழகத்தில் தொன்றுதொட்டு தனித்துவமான பாரம்பரிய மிக்க நாட்டார் இசை மரபுகள் காணப்பட்டன (Kandaiya, 1964). அவை மக்களது வாழ்வியலில் செல்வாக்கு பெற்றிருந்தமை தனிச்சிறப்புமிக்க அம்சமாகும். அவை பின்வருமாறு: மருத்துவிச்சிப் பாடல்கள், கொம்புமுறிப்

பாடல்கள், மீனவர் பாடல்கள், வசந்தன் பாடல்கள். நாட்டார் கவிகள், சிந்துப்பாடல்கள், கஞ்சன் அம்மானைப் பாடல்கள், சடங்கிசைப் பாடல்கள், ஊஞ்சல் பாடல்கள் என்பனவாகும் (Nataraja, 1962).

## மருத்துவிச்சிப் பாடல்கள்

ஒரு இனத்தின் நிலவுகைக்கு அடித்தளமாக இருப்பது இனப்பெருக்கம் ஆகும். இதனை சேவையாக செய்தவர்கள் மருத்துவிச்சிகள் ஆவர். இவர்கள் மருத்துவிச்சி வாழ்த்துப்பாடல்கள், மருத்துவிச்சிப் பாடல்கள், மருத்துவிச்சி கண்ணூறு கழித்தல் பாடல்கள் போன்ற பாடல்களை பாடுவர். மேலைத்தேய மருத்துவ கலாசாரம் வரும்வரை மருத்தவிச்சிமார்களே மகப்பேற்று வைத்திய நிபுணர்களாக இருந்தனர். இவர்கள் கர்ப்பவதியின் கர்ப்பவலியினை பொறுக்க வேண்டி, கர்ப்பவதியினை ஆற்றுப்படுத்தும் வகையில் மென்மையான தொனியில் தாய்மையின் பெருமைகளை கூறும் வகையில் பாடி சுகப்பிரசவம் நிகழ பாடி, வைத்தியம் செய்வர். இந்த மருத்துவிச்சிப் பாடல்கள் இசைமரபினை பின்பற்றும் வகையில் தற்காலத்தில் மேலைத்தேய நாடுகளில் மென்மையான வாத்திய இசையினை பிரசவத்தின் போது கேட்கச்செய்வர். ஆனால் தற்காலத்தில் இம்மரபு மட்டக்களப்பு தமிழகத்தில் வழக்கொழிந்துவிட்டது (Velapaadi Manonmani, Age-73, Doctor, Informer, Sivananda National School, Batticaloa, Sri Lanka.).

குழந்தை பிறந்த பின்னர் பாடுகின்ற மருத்துவிச்சிப் பாடல் பின்வருமாறு,

"அயலும் புடையும் வாழவேண்டும்

அன்னமும் சுற்றமும் வாழவேண்டும்"

## கொம்புமுறிப் பாடல்கள்

கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புடைய பாரம்பரிய விளையாட்டு கொம்புமுறி விளையாட்டாகும். இவ் விளையாட்டு இடம்பெறும் போதும், விளையாடிய பின்னரும் கொம்புமுறிப் பாடல்கள் பாடப்படும். அதிலும் வெற்றி பெற்ற அணியினர் தோற்ற அணியினரை வசை பாடியும் சில பாடல்கள் பாடப்படுகின்றன. இம்மரபு தற்கால மட்டக்களப்பு தமிழகத்தில் மருவிய வண்ணம் காணப்படுகின்றன. இப்பாடல்கள் மட்டக்களப்பிற்குரிய தனித்துவமான பாடல் வகையாகும்.

"கோலப்பணிச்சேலை கொய்துடுத்து

கொம்பு விளாட்டுக்குப் போகையிலே"

இப்பாடல்கள் வசைபாடுதல், வெற்றி பெற்ற அணியினரை போற்றுதல், தோல்வி அடைந்த அணியினரை தூற்றுதல் போன்ற விடயங்களை கொண்டுள்ளது (Maheshwaralingam, 1997).

## நாட்டுக்கவிகள்

மட்டக்களப்பில் நான்கு வரிகளைக்கொண்டு தனது உணர்வுகள், மன உட்கிடக்கைகள் அனைத்தையும் நாகரிய முறையில் சுருங்க கூறுகின்ற இசைவடிவம் நாட்டக்கவிகள் எனப்படுகின்றன. இதனை தமிழர், முஸ்லீம் என இரு இனத்தவரும் வழக்கில் கொண்டு வாழ்ந்தனர். இவை ஆசைக்கவி, இரங்கல் கவி, தூதுக்கவி, அறக்கவி, வசைக்கவி, அந்ததக்கவி, பொதுக்கவி, தாலாட்டுக்கவி என பல வகைப்படுகின்றன. இம்மரபு பயில் நிலையில் இருந்து வழக்கொழிந்து வருகின்றது. இவ் இசைவடிவத்தின் பிரதிபலிப்பாகவே கைக்கூ, நவீன கவிதைகள் என்பன தோன்றின எனலாம். நாட்டுக்கவிகளின் தனித்துவங்களில் முக்கியமானது வட்டார வழக்குச் சொற்களை கொண்டு மட்டக்களப்பு தமிழகத்தின் மண்வாசனை மிக்க சொற்களை பயன்படுத்துவதாகும்.

### உதாரணம்

"தண்ணிக்குப் போமகளே

தரியாமல் வாமகளே

கண்ணுக்கு உயர்ந்தவரை

கடைக்கண்ணாலும் பாராதேகா" (Kanapathipillai, Age-98, former teacher, Informer, Arayampathy, Sri Lanka.)

## சடங்கிசைப் பாடல்கள்

மட்டக்களப்பில் காணப்படும் நாட்டார் இசைமரபுகளில் சடங்கிசைப்பாடல்கள் எதுவித தழம்பலுமின்றி மக்கள் வாழ்வியலில் தொன்று தொட்டு காணப்படுகின்றன. இவை மக்களின் ஆகமம் சாராசடங்குத் தெய்வ வழிபாடுகளுடன் பின்னிப்பினைந்து காணப்படுகின்றன. ஆய்வுப்பிரதேச மக்கள் சிறு பிள்ளை முதல் பெரியோர் வரை ஆகமம் சாரா சிறுதெய்வ வழிபாட்டில் நம்பிக்கையும், பயபக்தியும் கொண்டு வாழ்கின்றனர். இவற்றுடன் தொடர்புடைய காவியம், அகவல், நடை, விருத்தம், உடுக்குச்சிந்து, வாழி, புலம்பல், குளிர்த்திப்பாடல் என ஏராளமான சடங்கு இசை வடிவங்கள் பயில் நிலையில் காணப்படுவது. தனிச்சிறப்பு மிக்கதாகும். ஏனைய நாட்டார் இசைமரபுகளை விட சடங்கிசை வழக்கில் காணப்படுவதற்கு மக்களது நம்பிக்கைகளும் ஆகமம் சாரா வழிபாட்டின் மீது காணப்படும் பயபக்தி, வழிபாட்டின் மூலம் மக்கள் பெறுகின்ற பூரணத்துவமான திருப்தி என்பன காரணமாகும்.

### உதாரணம்

"அமிர்தபரிபூரணி நளினவிழி காரணிழ

அன்னபரிபூரணிசொர்ணமருள்பாகிரி....." (Maheshwaralingam, 1997)

## கர்நாடக இசைமரபுகள்

தற்கால மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் நாட்டார் இசையில் இருந்து சாஸ்திரிய இசையின்பால் படிப்படியாக பின்பற்றத் தொடங்கி விட்டன. அதாவது 1972 இற்கு பின் கர்நாடக இசை பாடசாலை மட்டங்களில் ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை மாணவர்கள் பாடசாலையில் கற்கத்தொடங்கனர். அதேநேரம் பாடசாலைகளில் சைவவமயம் பாடத்தினை தரம் 1-11 வரை மாணவர்கள் கற்கின்றனர். அதில் ஏராளமான தேவாரங்கள் மனனம் செய்து பாடப்படுகின்றன. அத்துடன் அறநெறிப்பாடசாலைகளில் பண்ணிசை வகுப்புக்கள் இடம்பெறுகின்றன. பிரத்தியேக தனியார் கலைக்கூடங்களில் சாஸ்திரிய இசை வகுப்புக்கள் இடம்பெறுகின்றன (Murugesu Dayanidhi, Age-50, Informer, Senior Lecture, New Educational Institute, Columbo, Sri Lanka). அத்துடன் சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், தாழங்குடா கல்வியியற் கல்லூரி போன்ற உயர்கல்வி நிறுவனங்களிலும் சாஸ்திரிய இசை கற்பிக்கப்படுவதனால் பாரம்பரிய நாட்டார் இசைமரபுகள் படிப்படியாக வழக்கில் இருந்து மறைந்து விட்டன. அதேநேரத்தில் கூத்து இசை வடிவத்தினை பல்கலைக்கழகங்கள் எடுத்து 'கூத்து மீளுருவாக்கம்' என்பவற்றை மேற்கொள்வதனால் சிறிதளவு கூத்துக்கள் வழக்கில் காணப்படுகின்றன (Priyadarshini Jagadeeswaran, Age-50, Informer, Lecture, Swami Vipulananda Institute of Aesthetic Studies, Batticaloa, Sri Lanka.).

## மேற்கத்தேய இசைமரபுகள்

மட்டக்களப்பில் மேலைத்தேய நாட்டவர்களின் ஆட்சியினால் கிறிஸ்தவ சமயம் புகுத்தப்பட்டன. இதனைப் பின்பற்றி மக்கள் கபறிஞ்ஞா, பைலா, போன்ற இசைவடிவங்களை கிற்றார், வயலின், றம்ஸ், பியானோ, ஒகன் என மேலைத்தேய இசைக்கருவிகளைக் கொண்டு நடாத்துகின்றனர். அத்துடன் இம்மரபில் கிறிஸ்தவ பக்திப்பாடல்கள் தோற்றம் பெறத் தொடங்கின. இம்மரபில் கிறிஸ்தவ பக்திப்பாடல்களின் பின்னணிஇசை மேலைத்தேய இசைமரபினை தழுவிக் காணப்படும் (Christiana Vasanthi, Age-64, Informer, Dance Master, Sivananda National School, Batticaloa, Sri Lanka.).

## இசைக்குழுக்களும், சுதந்திர சுதேச இறுவெட்டுக்கள் வெளியீடும்

தற்கால மட்டக்களப்பில் தொழில்நுட்ப வளர்ச்சியினாலும், பன்முக கலாசார சமூகங்களின் நிலவுகையினாலும் பல இசைக்குழுக்கள் தோன்றின. அவை சித்திரைப்புத்தாண்டு, பாடசாலை

பரிசளிப்பு விழாக்கள், திருமண வைபவங்கள், பிறந்த நாள் வைபவங்கள் மற்றும் கலாசார விழாக்களிலும் மெல்லிசைப்பாடல்களை அதாவது தென்னிந்திய சினிமாப்பாடல்களை இசைக்குழுக்கள் மூலம் நேரலைகளில் பாடுவர். இங்கு இதயம் இசைக்குழு, தீபம் இசைக்குழு என்பன இன்றுவரை சினிமா மெல்லிசை கச்சேரிகளை நிகழ்த்துகின்றனர். இதனைப்போன்று சுதேச மெல்லிசை பாடல்கள் அடங்கிய இறுவெட்டுக்களும் வெளிவருகின்றன. அத்துடன் புதியபுதிய சுதேச இசைப்படைப்புக்களை சமூக வலைத்தளங்களில் என்பவற்றில் வெளியிட்டு அதனை உலகறியச் செய்கின்றனர். இவ்வாறு மட்டக்களப்பு இளஞ்சமூகத்தினர் இசைப்படைப்புகளை படைத்து சமூக வலைத்தளங்களில் தனது திறமைகளை வெளிக்காட்டுகின்றனர். இதனால் மட்டக்களப்பு தமிழக இளம் இசைக்கலைஞர்கள் சுதந்திர இசைக்கலைஞர்கள் என அடையாளப்படுத்தப்படுகின்றனர். அத்துடன் ஆலயங்களில் பக்திபாடல்களை எழுதி, இசையமைத்து அதனை இறுவெட்டு, சமூக வலைத்தளங்கள் என்பவற்றில் வெளியிடுகின்றனர். இவ்வாறான இசைக் கலாசாரம் தற்காலத்தில் காணப்படுகின்றது.

## முடிவுரை

பழமையன கழிவதும், புதியன புகுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். அதேபோன்று மக்களின் சிந்தனை, செயல், பொழுதுபோக்கு காலத்திற்கு ஏற்ப மாறுபடுகின்றன. இதனால் எமது பாரம்பரிய இசைமரபுகள் படிப்படியாக வழக்கில் இருந்து மறைந்து விடுகின்றன. அதே நேரத்தில் மேலைத்தேய நாட்டவரின் ஆட்சி, தொடர்ச்சியான போர் (30 வருடங்கள்) இடப்பெயர்வுகள், நவீன தொழில் நுட்ப வளர்ச்சிகள் என்பன காரணமாக ஏராளமான பழையான பாரம்பரிய ஊராளமான இசைமரபுகள் வழக்கொழிந்தாலும், சில சடங்கிசை, கூத்திசை என்பன பல்கலைக்கழகங்கள் வாயிலாக பட்டப்படிப்பு கற்கைகளுக்குள் உள்வாங்கப்பட்டமை, அத்துடன் சடங்கிசைப் பாடல்கள் பக்தியின் (வழிபாட்டு நம்பிக்கையில்) பால் காணப்படுகின்றன. அத்துடன் சுதேச இசைப்படைப்புக்கள், ஆலய கூட்டுப்பிரார்த்தனை, இசைக்கச்சேரிகள், உயர்கல்வியில் சாஸ்திர இசைக் கற்றல் என்பன சாஸ்திரிய இசைமரபுகளை நிலைநாட்டி நிற்கின்றன. அத்துடன் பன்முக சமய கலாசார நிலவுகையினால் மேற்கத்தேய இசை, இசைக்குழுக்கள் என்பன தற்கால மட்டக்களப்பில் நவீன தொழில்நுட்ப விருத்தியுடன் புத்தாக்க, சுதேச இசைப்படைப்புக்களை வெளியிடுகின்றன. இவ்வாறான இசைமரபுகளே தற்கால மட்டக்களப்பில் காணப்படுகின்றன. இருந்தபோதிலும் இலங்கையில் காணப்படும் ஏனைய மாவட்டங்களை விட மட்டக்களப்புத் தமிழகத்திலேயே நாட்டார் இசைமரபுகள் அதிகமாக வழக்கில் காணப்பட்டாலும் முற்காலங்களை விட பயில் நிலியல் நாட்டார் இசைமரபு குறைந்தளவே காணப்படுகின்றன என்பதனை மறுக்கமுடியாது. ஆத்துடன் சாஸ்திரிய கர்நாடக இசை, மேற்கத்தேய இசை, மெல்லிசை, சுதந்திர சுதேச இசைப்படைப்புகளின் தோற்றம் என்பவற்றைக் கொண்ட இசைமரபுகளே தற்கால மட்டக்களப்பின் இசைகலாசாரமாக காணப்படுகின்றது.

## References

Kandaiya, V.C., (1964) Mattakalappu Thamizhagam, Ezhakesari Ponnaya Memorial Hall, Sri Lanka.

Maheshwaralingam, K., (1997) Kombu, Regional Cultural Forum, Sri Lanka.

Nataraja F.X.C., (1962) Ezhaththu Nadodi Padalgal, Asirvatham Press, Batticaloa, Sri Lanka.

### Funding

No funding was received for conducting this study.

### Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

### About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

Thangarasa Gopinath, Batticaloa, Tamilnadu People and Music, Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 96-100. DOI: https://doi.org/10.54392/ijmrd223119